# நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
# நலன்புரி நன்மைகள் சபை

## வெற்றிடங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமையும் அனுபவமும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவி | | |
|---|---|---|---|
| | | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **தகைமைகள்** |
| 01 | உதவி நலன்புரி ஆணையாளர் (நிர்வாகம்)<br><br>MM-1-1 | 01 | I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / மனித வளங்கள் முகாமைத்துவத்தில் சிறப்பு இளமானிப் பட்டம். (வகுப்பொன்றுடன் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br><br>அத்துடன்<br>II. முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பின் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br><br>III. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து மூன்று மாதங்களுக்கு குறையாத கணினி கற்கைகளுக்கான சான்றிதழ். |
| 02 | உதவி நலன்புரி ஆணையாளர் (அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி)<br><br>MM-1-1 | 01 | I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / பொருளியியலில் சிறப்பு இளமானிப் பட்டம். (வகுப்பொன்றுடன் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br><br>அத்துடன்<br>II. முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பின் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>மற்றும்<br><br>III. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து மூன்று மாதங்களுக்கு குறையாத கணினி கற்கைகளுக்கான சான்றிதழ். |
| 03 | உதவி நலன்புரி ஆணையாளர் (தொடர்பாடல்)<br><br>MM-1-1 | 01 | I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெகுசன தொடர்பாடல் / சந்தைப்படுத்தல் /கருத்திட்ட முகாமைத்துவம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம் என்பவற்றில் சிறப்பு இளமானிப் பட்டம். (வகுப்பொன்றுடன் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br><br>அத்துடன் |

| | | | |
|---|---|---|---|
| | | | II. முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பின் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>III. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து மூன்று மாதங்களுக்கு குறையாத கணினி கற்கைகளுக்கான சான்றிதழ். |
| 04 | உதவி நலன்புரி ஆணையாளர் (சமூகப் பாதுகாப்பு)<br><br>MM-1-1 | 01 | I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொருளியியல் / சமூகவியல் / சமூகக் கற்கைகள் / சமூக அபிவிருத்தி / முகாமைத்துவம் என்பவற்றில் சிறப்பு இளமானிப் பட்டம். (வகுப்பொன்றுடன் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br>அத்துடன்<br>II. முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பின் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>III. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து மூன்று மாதங்களுக்கு குறையாத கணினி கற்கைகளுக்கான சான்றிதழ். |
| 05 | உதவி நலன்புரி ஆணையாளர் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு)<br><br>MM-1-1 | 01 | I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொருளியியல் / கருத்திட்ட முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் என்பவற்றில் சிறப்பு இளமானிப் பட்டம். (வகுப்பொன்றுடன் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br><br>அத்துடன்<br>II. முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பின் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>III. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து மூன்று மாதங்களுக்கு குறையாத கணினி கற்கைகளுக்கான சான்றிதழ். |
| 06 | உதவி நலன்புரி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்ப முறைமை அபிவிருத்தி)<br><br>MM-1-1 | 01 | I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் / கணினி விஞ்ஞானம் / மென்பொருள் பொறியியல் என்பவற்றில் சிறப்பு இளமானிப் பட்டம். (வகுப்பொன்றுடன் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br><br>அத்துடன்<br>II. முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆகக்குறைந்தது ஒரு வருட பின் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 07 | உதவி நலன்புரி ஆணையாளர் (நிதி)<br><br>MM-1-1 | 01 | I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / கணக்கீடு / நிதி மற்றும் வர்த்தகம் என்பவற்றில் சிறப்பு இளமானிப் பட்டம். (வகுப்பொன்றுடன் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br>அல்லது<br>II. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகத்தில் உயர் தேசிய டிப்ளோமா பெற்றவராக இருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>III. இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது வேறு ஏதேனும் பொதுநலவாய நாட்டிலுள்ள பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தில் இடைநிலை அல்லது லைசன்ரியேட் II அல்லது வணிக மட்டத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br>IV. ஐக்கிய இராச்சியம் அல்லது வேறு ஏதேனும் பொதுநலவாய நாட்டிலுள்ள பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தால் நடத்தப்படும் செலவுகள் மற்றும் முகாமைத்துவ பரீட்சை அல்லது உயர் பரீட்சையில் I மற்றும் II பாகங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>V. ஐக்கிய இராச்சியம் அல்லது வேறு ஏதேனும் பொதுநலவாய நாட்டிலுள்ள சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் நிறுவனத்தின் முதல் தொழில்முறை நிலை அல்லது உயர்நிலை பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br><br>VI. ஐக்கிய இராச்சியம் அல்லது வேறு ஏதேனும் பொதுநலவாய நாட்டிலுள்ள சான்றளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் சங்கத்தின் பரீட்சையின் பாகங்கள் II மற்றும் I அல்லது உயர்நிலைப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அத்துடன்<br>VII. முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பின் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 08 | உதவி நலன்புரி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம் - தொழிற்பாடு)<br><br>MM-1-1 | 01 | I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் / கணினி விஞ்ஞானம் / கணினி பொறியியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பட்டம் என்பவற்றில் சிறப்பு இளமானிப் பட்டம். (வகுப்பொன்றுடன் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) |

| | | | |
|---|---|---|---|
| | | | அத்துடன்<br>II. முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பின் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். |

**வயது:**
22 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரையறை ஏற்புடையதாகாது.

**தெரிவுசெய்யப்படும் முறை:**
நேர்முகப்பரீட்சையில் பெறுகின்ற அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு அடிப்படை:**
இப் பதவி நிரந்தரமானது. பதவி நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

**மாதாந்த சம்பளம்:**
MM 1-1-2016 ரூபா (53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575) + அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.
ஊழியர் சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 8% செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அரசாங்க பங்களிப்பான 12% இனை நலன்புரி நன்மைகள் சபை செலுத்தும். மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான 3% பங்களிப்பு நலன்புரி நன்மைகள் சபையினால் செலுத்தப்படும்.

**விண்ணப்பப்படிவத்தை பின்வரும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யமுடியும்:**
http://www.treasury.gov.lk/web/ministry-of-finance/vacancies
https://www.wbb.gov.lk/web/si/jobs

பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை 2023.12.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், **ஆணையாளர், நலன்புரி நன்மைகள் சபை, 1 ஆவது மாடி, புதிய கட்டிடம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, கொழும்பு 01** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து ஒப்படைக்கவோ அல்லது wbb.commisioner.vacancy@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்ப முடியும். அரசாங்க / கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ஏற்புடைய நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கும், பூரணமற்ற அல்லது இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

<u>மேலும், விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது விடயத்தின் (Subject) கீழ் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.</u> இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல், திருத்துதல், மாற்றியமைத்தல் அல்லது விண்ணப்பதாரிகளை சுருக்க பட்டியல்படுத்தல் தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபையின் ஆணையாளரின் தீர்மானமே இறுதியானதாக கருதப்படும்.

**ஆணையாளர்**
**நலன்புரி நன்மைகள் சபை**
**1 ஆவது மாடி, புதிய கட்டிடம்**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**
**கொழும்பு 01**